கோவிட்-19 பரவுவதைத் தடுக்க ஒன்ராரியோ **துரித அன்டிஜன் பரிசோதனைகளை** இலவசமாக தருகிறது.

துரித அன்டிஜன் பரிசோதனை என்றால் என்ன?

- இது கோவிட்-19 வைரசை கண்டுபிடிக்க உதவும், பயன்படுத்துவதற்கு இலகுவான பரிசோதனை.
- 15 நிமிடத்தில் முடிவுகள் தெரியும் மற்றும் PCR பரிசோதனை மூலம் உறுதி செய்யத் தேவையில்லை.
- துரித அன்டிஜன் பரிசோதனையை வீட்டில் செய்வதற்கு பரிசோதனையோடு வரும் அறிவுரைகள், இந்த வீடியோ youtube.com/watch?v=CBBd4JRWTsg, மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட வாய்வழி மற்றும் மூக்குவழி பஞ்சால் துடைத்தெடுப்பதற்கான அறிவுரைகளை (இது பரிசோதனைத் திறனை அதிகரிக்கலாம்) ontariohealth.ca/RATinstructions ஐ பாருங்கள்.

துரித அன்டிஜன் பரிசோதனையை யார் பயன்படுத்த வேண்டும்?

- பின்வரும் கோவிட்-19 அறிகுறி ஒன்றை கொண்டுள்ள நபர்கள்:
  - காய்ச்சல் மற்றும்/அல்லது குளிர்
  - இருமல்;
  - மூச்சுத் திணரல்;
  - சுவை அல்லது மணம் குறைவது அல்லது இல்லாமல் போவது; அல்லது
  - பின்வருவனவற்றில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அறிகுறிகளை கொண்டிருப்பவர்:
    - மூக்கு ஒழுகுதல்/மூக்கடைப்பு
    - தலைவலி
    - மிக மோசமான களைப்பு
    - தொண்டை வலி
    - உடம்பு வலி/மூட்டு வலி
    - இரைப்பை குடல் அறிகுறிகள் (அதாவது வயிற்றுப் பிரட்டல், வாந்தி அல்லது வயிற்றோட்டம்)
- கோவிட்-19 க்கான அறிகுறிகள் இல்லாதவர்கள் மற்றும் அந்த நோயுள்ளவர்களோடு பழகாதவர்கள் பரிசோதனை ஒன்றை (உதாரணமாக சமூக ஒன்றுகூடுதலுக்கு முன்) செய்யத் தேவையில்லை. அப்போதும்கூட நீங்கள் இந்த பரிசோதனையை செய்ய விரும்பினால் சமூக ஒன்றுகூடல் நேரத்திற்கு மிக நெருக்கமாக செய்யுங்கள். நெகடிவ் முடிவைப் பெற்றாலும் சில வேளை இந்த நோய் இருக்கலாம் என்பதை தெரிந்துகொள்ளுங்கள்.

எனது பரிசோதனை முடிவு எதை அர்த்தப்படுத்தும்?

பாசிடிவ் பரிசோதனை முடிவு

உங்களுக்கு கோவிட்-19 இருப்பதற்கு வாய்ப்பு அதிகம்.

உங்களுக்கு கோவிட்-19 இருக்கக்கூடும் என நினைத்தால் அல்லது அது பரவக்கூடிய இடத்தில் நீங்கள் இருந்திருந்தால் **ontario.ca/exposed** க்கு செல்லுங்கள். துரித அன்டிஜன் பரிசோதனை பற்றி மேலும் தெரிந்துகொள்ள **ontario.ca/rapidtest** க்கு செல்லுங்கள்.

Ontario

- உங்களுக்கு காய்ச்சல் இல்லாமல் மற்றும் 24 மணி நேரங்களுக்கு அறிகுறிகள் குறைந்து வரும் வரை உடனடியாக உங்களை தனிமைப்படுத்துங்கள். (அல்லது இரைப்பை குடல் அறிகுறிகள் இருந்தால் 48 மணிநேரம் வரை)

    - தனிமைப் படுத்திய பின்பு, பொது இடங்களில் முகக் கவசம் அணியுங்கள். உங்களுக்கு அறிகுறிகள் தோன்றியதில் இருந்து 10 நாட்களுக்கு (அல்லது அறிகுறிகள் இல்லாவிட்டால், உங்களுக்கு பாசிடிவ் முடிவு கிடைத்த நாளில் இருந்து) நோய் இலகுவாக தொற்றக்கூடியவர்கள் இருக்கும் இடங்களுக்கு மற்றும் நோய் தொற்றும் ஆபத்து அதிகமுள்ள இடங்களுக்குப் போவதை தவிருங்கள்.

- உங்களுக்கு நோயெதிர்ப்பு குறைபாடு இருக்கின்றது என்றால், நீங்கள் பாசிடிவ் பரிசோதனை முடிவைப் பெற்ற நாள் முதல் அல்லது உங்களுக்கு நோய் அறிகுறிகள் ஆரம்பித்த நாள் முதல் (இவற்றில் எது முதலாவதாக நடந்ததோ அதிலிருந்து) உங்களுக்கு காய்ச்சல் போகும்வரை, உங்கள் நோய் அறிகுறிகளில் முன்னேற்றம் ஏற்பட்டு 24 மணி நேரம் ஆகும்வரை (அல்லது இரைப்பை குடல் அறிகுறிகள் என்றால் 48 மணி நேரம்வரை) குறைந்தது 10 நாட்களுக்கு உங்களை தனிமைப் படுத்திக்கொள்ளுங்கள்.

- நோய் தொற்ற மிக அதிக வாய்ப்புள்ள இடத்தில்[1] நீங்கள் வசித்தால், வேலைசெய்தால், கலந்துகொண்டால் அல்லது தொண்டராக இருந்தால் உங்களுக்கு பாசிடிவ் முடிவு இருப்பதை அவர்களுக்கு தெரிவித்து அவர்கள் தரும் வழிநடத்தலை பின்பற்றுங்கள்.

- உங்கள் வீட்டில் வசிப்பவர்கள் மற்றும் நெருக்கமாக பழகுகிறவர்களிடம் இதை அறிவித்து அவர்கள் முகக்கவசம் அணியும்படி அறிவுரை கூருங்கள். 10 நாட்களுக்கு நோய் இலகுவாக தொற்றக்கூடியவர்கள் இருக்கும் இடங்கள் மற்றும் நோய் தொற்றும் ஆபத்து அதிகமுள்ள இடங்களுக்குப் போவதை தவிர்க்கச் சொல்லுங்கள்.

- நீங்கள் அதிக ஆபத்துக்குரிய நிலையில் இருந்தால், அறிகுறிகள் தோன்றி 5 நாட்களுக்குள் நீங்கள் அன்டிவைரல் மருந்தை எடுத்துக்கொண்டால் அது நோய் தீவிரமடைவதை தடுக்க உதவும். மேலதிக தகவலுக்கு ontario.ca/antivirals க்குச் சென்று பாருங்கள் அல்லது 811 ஐ அழையுங்கள்.

நெகடிவ் துரித அன்டிஜன் பரிசோதனை முடிவு

- உங்களுக்கு கோவிட்-19 அறிகுறிகள் இருந்து முடிவு நெகடிவ்வாக இருந்தால், அப்போதும் உங்களுக்கு கோவிட்-19 இருக்கக்கூடும்.
- முதல் நெகடிவ் முடிவில் இருந்து 24-48 மணி நேரங்களுக்குப் பிறகு இன்னொரு துரித அன்டிஜன் பரிசோதனை செய்யவும். அதுவும் நெகடிவ்வாக இருந்தால் உங்களுக்கு அநேகமாக கோவிட்-19 இருக்காது. குறைந்தது 24 மணி நேரங்களுக்கு (அல்லது இரைப்பை குடல் அறிகுறிகள் என்றால் 48 மணி நேரங்கள்) அறிகுறிகளில் முன்னேற்றம் ஏற்படும் வரை தனிமைப்படுத்திக்கொள்ளுங்கள்.

மீள்விற்பனை செய்யக்கூடாது

Publication No. (300868) ISBN No. 978-1-4868-5915-3. Revised PDF September 2022.
© Queen's Printer for Ontario, 2022.

[1] அதி உயர் ஆபத்துள்ள இடங்கள் என்பது மருத்துவமனைகள் (பெரிய தொடர் பராமரிப்பு நிலையங்கள் உட்பட) மற்றும் நீண்டகால பராமரிப்பு, ஓய்வுபெற்றோருக்கான இல்லங்கள், சுதேசிகளுக்கான முதியோர் பராமரிப்பு இடங்கள், குழுவாக வாழும் வீடுகள், அடைக்கல நிலையங்கள், விலை குறைந்த தங்குமிடங்கள், சீர்திருத்த நிலையங்கள் மற்றும் மருத்துவ பள்ளிகள் ஆகியவற்றை உள்ளடக்கும், மருத்துவ ரீதியாகவும் சமூக ரீதியாகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஒன்றுகூடி வாழும் இடங்களையும் உட்படுத்தும்.